சம்பந்தப்பட்ட துறையாகும். இங்கே நாங்கள் ஒதுக்குகின்ற பணத்தை, கதர்த்துறைக்கு ஒதுக்குகின்றோம். அப்ளிகேஷன் எல்லாம் அவர்களுடைய துறையில்தான் கொடுக்க வேண்டும் என்பதை இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. எஸ். பி. மணவாளன்: தலைவர் அவர்களே, செருப்பு தைக்கும் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படும் பணிக்கூடம் ஒன்றின்மதிப்பு எவ்வளவு? அதில் மைய, மாநில அரசினுடைய மானிய பங்கு எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்; தலைவர் அவர்களே, முதலிலே 7,300 கொடுக்கப்பட்டது. 1986-87ல் அது போதாது என்று 8,500 ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டமே ஸ்பெஷல் காம்போனென்ட் பிளான் என்ற திட்டத்தின் கீழ் மைய அரசினுடைய நிதியோடு வழங்கப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. க. பாலசுப்பிரமணியன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த காலணி தைக்கும் தொழிலாளிகளைத் தேர்ந்தெடுப்பதற்கு ஆதிதிராவிடர் நலத்துறை மூலமும், அதேபோல தச்சுத் தொழில் செய்பவர்களுக்கு மானியம் கொடுத்து அவர்களை ஊக்குவிப்பதற்கு தேர்ந்தெடுக்கும்போது அரசு ஊழியர்கள் அல்லாதவர்கள் அடங்கிய குழு ஒன்று ஏற்கனவே செயல்பட்டு வந்தது. அப்படிப்பட்ட குழு இப்போது இல்லை என்று தெரிகிறது. அப்படிப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழுவை மாவட்டத்திற்கு ஒன்று அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும். அது பற்றிய விவரம் என்னிடம் இல்லை.

மலைவாழ் மக்களுக்கு தனிக் கடன் நிவாரணச் சட்டம்.

281—(*வினா எண். 11940) திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு ஆதிதிராவிட நலத் துறைஅமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மலைவாழ் மக்களுக்கு என்று தனிக் கடன் நிவாரணச் சட்டம் இயற்ற அரசிற்கு உத்தேசம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. மா. மணிமாறன்: தலைவர் அவர்களே, மலைவாழ் மக்களுக்கு இயற்றுகின்ற நிவாரணச் சட்டத்தைப்போல தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் பல இடங்களில் கடன் வாங்கிவிட்டு தொழிலை முறையாக நடத்த தெரியாத காரணத்தினலும், உதவிகள் சரியாக கிடைக்காத காரணத்தினாலும் பல

1987 ஏப்ரல் 3]

இடங்களில் இழப்பு ஏற்பட்டு இருக்கிறது. இழப்பை ஈடு செய்கின்ற அளவுக்கு, அவர்களும் இந்தச் சட்டத்தில் இடம் பெறுவதற்கு அரசு முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: தலைவர் அவர்களே, இது மலைவாழ் மக்களுக்கென்ற தனி நிவாரணச் சட்டம் இயற்றுகின்ற கேள்வியைப் பற்றியது. தனிக் கேள்வி போடவும்.

திரு. மா. ம்ணிமாறன்: தலைவர் அவர்களே. மலைவாழ் மக்களுக்கு இருக்கின்ற சட்டத்தைப்போல ஷெட்யூல்ட் கேஸ்ட்—தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்களுக்கும் ஒரு சட்டத்தை இயற்றுவதற்கு அரசு முன்வருமா? மேலும் டிக் போன்ற ஸ்தாபனங்கள் கொடுக்கின்ற கடனில் அவர்களுக்கு முறையான பயிற்சியும், அறிவாற்றலும் இல்லாத காரணத்தினாலும் முறையாகத் தொழிலை தொடங்க முடியவில்லை. ஆதிதிராவிட நலத்துறை தனியாக ஒரு சிறப்புத்திட்டத்தை உருவாக்கி அவர்களுக்கு பயிற்சி அளித்து கடன் கொடுக்க அரசு ஆராயுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: தலைவர் அவர்களே, இந்தியன் கான்ஸ்டிடியூஷன் பொறுத்தவரையில் ஆதிதிராவிட மக்களுக்கு தனியாக சட்டம் இயற்றப்பட்டு அந்த மக்களுக்கு பெர்சன்டேஜ் ஒதுக்கப்பட்டு, இந்த அரசும் அதிலே உள்ளிப்பாக இருந்து செயலாற்றிக்கொண்டிருக்கிறது. அதற்கு தனியாக ஒரு சட்டம் தேவையில்லை. இருக்கின்ற சட்டத்தை வைத்தே இங்கே நிறையச் சலுகைகளை அரசு செய்துகொண்டு இருக்கிறது.

திரு. சோ. கலிதீர்த்தான்: தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியைச் சேர்ந்த கல்ராயன்மலையில் வாழும் மலைவாழ் மக்களுக்கு தற்போது சரியான முறையிலே இன்னும் பட்டா வழங்காத காரணத்தினால் அவர்கள் அரசு சார்பாக வழங்குகின்ற கடன் சலுகைகளைப் பெறமுடியாத நிலை உள்ளது. எனவே அவர்கள் கிணறுகளை வெட்டுவதற்கும், மோட்டார், ஆயில் என்ஜின் போன்றவைகளை வைப்பதற்கும் அங்குள்ள நிர்வாக அலுவலர் அவர்களுடைய அனுபவத்தை வைத்து அவர்களுக்குரிய சர்ட்டிபிகேட் வழங்கினால், அரசாங்கம் ஆதிதிராவிடத் துறை மூலமாக தனி நிவாரணம் அளிக்க உதவி செய்ய முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: தலைவர் அவர்களே. வருமானத்தைக் கணக்கில் கொள்ளாமல் அனைத்து பழங்குடி மக்களுக்கும் கடன் நிவாரணம் அளிக்க தனியாக ஒரு கடன் நிவாரணச் சட்டம் வழங்கவேண்டும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆலோசனையின்பேரில், சட்டம் மற்றும் கல்வித்துறை அமைச்சர் அவர்களும், நிதியமைச்சர் அவர்களும் பார்த்து, இப்போது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆணைபெற இருக்கிறது. அதற்குப் பின்னர் மத்திய அரசினுடைய

ஒப்புதல் பெற்றபின் சட்டப் பேரவையிலே நிறைவேற்றப்படும், அதன பின்னர் அங்கிருக்கின்ற மக்களுக்கு எந்தவிதமான பொருளாதார வருமானத்தையும் கணக்கில் கொள்ளாமல் எல்லாச் சலுகையும் வழங்குவதற்கு இந்தச் சட்டம் உறுதுணையாக இருக்கும்.

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைவாழ் மக்களுக்கும், ஆதிதிராவிட மக்களுக்கும் ஒட்டு மொத்தமாக பட்டா வழங்குவதில், மிக, மிகத் தாமதப்படுகின்றது. அரசாங்கம், அந்த மானியம் வருகின்ற போதாவது, அனைத்து மக்களுக்கும், எங்கு தாமதப்பட்டிருக்கின்றதோ, அங்கு பட்டாக்கள் உடனடியாக வழங்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட பிரச்சினை இல்லை. அப்படி இருக்குமானால் அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கும்.

கொடைகானலிலிருந்து நகரப் பேருந்து.

274—(*வினா எண். 8524) டாக்டர் த. முகம்மது சலீம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொடைக்கானல் தனி வட்டமாக அறிவிக்கப்பட்டுள்ளதை அடுத்து கொடைக்கானலிலிருந்து நகரப் பேருந்துகள் விடும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எத்தனை? எப்போது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): ஆம். கொடைக்கானலில் நகரப்பேருந்து விடுவதற்காக 27-8-1986 தேதிய தமிழ்நாடு அரசிதழில், அதனை நகரமாக அறிவிக்கை செய்யப்பட்டு, முதல் கட்டமாக கீழ்க்கண்ட வழித்தடங்களில் இரண்டு நகரப்பேருந்துகள் ஓட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது:

(1) கொடைக்கானல் பேருந்து நிலையம்—பண்ணைக்காடு

(2) கொடைக்கானல் பேருந்து நிலையம்—பூம்பாறை.

(3) கொடைக்கானல் பேருந்து நிலையம் — வில்பட்டி, குறிஞ்சி ஆண்டவர் கோயில் (தொடுதல்)

(4) கொடைக்கானல் பேருந்து நிலையம்—பள்ளங்கி.